தினகரன் (02.10.2019)

## கரூர் மூலிமங்கலத்தில் நடந்த

# இலவச சிறப்பு மருத்துவ முகாமில் 202 கால்நடைகளுக்கு பரிசோதனை

க.பரமத்தி, அக். 2: கரூர் அருகே மூலிமங்கலத்தில் நடந்த சிறப்பு இலவச மருத்துவ முகாமில் 202 கால்நடைகளுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டு நோய் தடுப்பு மருந்துகள் வழங்கப்பட்டது.

கரூர் டிஎன்பிஎல் நிறுவனமும், மாவட்ட கால்நடை பராமரிப்புத்துறை, கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் ஆகியவை இணைந்து காகித ஆலை பேரூராட்சி மூலிமங்கலத்தில் சிறப்பு இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது.

முகாம் தொடக்க விழாவில் காகித ஆலை பொது மேலாளர் (மனிதவளம்) பட்டாபிராமன் தலைமை வகித்தார்.

காகித நிறுவன செயல் இயக்குநர் (இயக்கம்) கிருஷ்ணன் தலைமை வகித்து கால்நடைகளுக்கு ஊட்டச்சத்து மாவினை வழங்கி முகாமினை தொடங்கி வைத்தார்.



கரூர் அருகே மூலிமங்கலத்தில் நடந்த இலவச சிறப்பு மருத்துவ முகாமில் கால்நடைகளுக்கு ஊட்டச்சத்து மாவை காகித ஆலை நிறுவன செயல் இயக்குனர்(இயக்கம்) கிருஷ்ணன், பொது மேலாளர்(மனித வளம்) பட்டாபிராமன் ஆகியோர் வழங்கினர்.

முகாமில் கால்நடை மருத்துவர் கண்ணன் தலைமையிலான மருத்துவக் குழுவினர் 13 எருமைகள், 25 பசு மாடுகள், 2 எருதுகள், 160 கோழிகள் மற்றும் 2 ஆடுகளுக்கு சினைப் பரிசோதனை, செயற்கை முறை கருவூட்டல், மலடு நீக்க சிகிச்சை, நோய் மாதிரி ஆய்வுப் பணி, கன்றுகள் மற்றும் ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம், கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கம், கோழிகளுக்கு கோழிக்கழிச்சல் தடுப்பூசி மற்றும் ஆடுகளுக்கு இலவச மருத்துவ பரிசோதனை செய்து கோமாரி நோய் தடுப்பு மருந்துகள் மற்றும் மருத்துவ ஆலோசனைகளையும் வழங்கினர்.

முகாமில் பங்கேற்ற அனைத்து கால்நடைகளுக்கும் ஊட்டச்சத்து மாவு வழங்கப்பட்டது. முகாமிற்கு தேவையான ஏற்பாடுகளை காகித ஆலை நிர்வாகம் செய்திருந்தது.